2013 மே 9]

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *ஊரகப் பகுதியாக இருந்தால் 3 ஏக்கர் நிலம் வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள், நெறிமுறைகள் சொல்கின்றன. மேலும், ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று சொன்னால், அப்பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவுக்கு வேறு எந்த மேல்நிலைப் பள்ளியும் இருக்கக்கூடாது. அந்த உயர்நிலைப் பள்ளியில் 100 மாணவர்கள் கண்டிப்பாக படிக்கவேண்டும் என்றெல்லாம் அரசு நெறிமுறை வகுத்துள்ளது. இந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய முறையிலே பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 454, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

454—

24 மணி நேர மருத்துவமனை

***4272—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் தொகுதி, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், போரூரில் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

ஆட்சியில், 2006 ஆம் ஆண்டில், 24 மணி நேரமும் செயல்படும் பிரசவ கவனிப்பு சேவை மையமாக விரிவுபடுத்தியும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த ஆண்டில் 30 படுக்கைகளைக்கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தியும், ஆணையிடப்பட்டு தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி அதிகமான தாய்மார்களும், சகோதரிகளும் வசிக்கக்கூடிய பகுதி. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை நிறையபேர் பயன்படுத்துகிறார்கள். உண்மையிலேயே 24 மணி நேரமும் இயங்கக்கூடியது. கூடுதலான மருத்துவர்களை நியமித்து செயல்படுத்தும்பட்சத்தில் இன்னும் அதிகமான தாய்மார்களின், சகோதரிகளின் செல்வாக்கைப் பெற ஏதுவாகும் என்று கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஆரோக்கியமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அயப்பாக்கம் பகுதி, 47,000 பேர் வசிக்கக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் மட்டும் 7,000 பேர் வசிக்கின்றார்கள். எனவே, அங்கிருக்கக்கூடிய மக்களுக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்கித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில், போரூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும், கதவூர் மற்றும் கொள்ளுமேடு ஆகிய இடங்களில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு போரூருக்கு அருகிலுள்ள திருவேற்காட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை கூடிய விரைவில்

செயல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

அதேபோன்று, போரூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு 20 உள் நோயாளிகளும், 300 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெறுவதுடன், 60 பிரசவங்கள் அங்கு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதுபோக, அந்த மருத்துவமனைக்கு தற்போது தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையிலே 72 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு பிரசவ அறை, அறுவை அரங்கம் மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு போன்றவற்றுக்கு கட்டடங்களெல்லாம் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலே மாண்புமிகு அம்மா அவர்களின் விரிவான காப்பீட்டுத் திட்டம் சிறப்பு வாய்ந்த தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அயப்பாக்கம் என்கின்ற பகுதிக்கு புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் தேவையென்று தெரிவித்திருக்கிறார்கள். அது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராவது ஒருவர் எழுந்திருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்திலே. . .